2010 ஏப்ரல் 7]

இதுவரைக்கும் 32 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்கள் என்றைக்குமே ஆதி திராவிட மாணவர்களினுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு முன்னுரிமை அளித்துச் செயல்படுத்தக்கூடியவர்கள். அதனால், இந்த ஆண்டு நிதி வரப்பெற்றவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கிடு) திரு சி. ஞானசேகரன், ஒரு நிமிடம் உட்காருங்கள்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 109—ன்கீழ் தன்னிலை விளக்கம்

5-4-2010 அன்று பேரவையில் அளித்த விடை தொடர்பாக மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் தன்னிலை விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—40

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் கடந்த 5 ஆம் தேதி வினா—விடை நேரத்தில் கும்மிடிப்பூண்டி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு நான் அளித்த விடையை அவர் ஏற்க மறுத்து இந்தச் சபையில் உண்மைக்குப் புறம்பான பல தகவல்களைச் சொல்லி இருக்கின்றார்கள். அது இந்தத் துறையினுடைய பொறுப்பு வகிக்கக்கூடிய எனக்கும், இந்து சமய அறநிலையத் துறைக்கும் களங்கம் கற்பிக்கின்ற வகையிலே இருக்கின்ற காரணத்தால் நான் ஒரு சில விளக்கத்தை இங்கே சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2010 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆம் தேதி காலையில் நடைபெற்ற வினா–விடை நேரத்தில் உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், சித்திராஜ கண்டிகை கிராமத்திலுள்ள அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயில் திருப்பணி குறித்து வினா எழுப்பி, மேற்படி வினாவிற்கு நான் அளித்த பதிலை ஏற்காமல், எதிர்மாறான சில கருத்துகளைக் கூறி இம்மாமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு இடையூறாக நடந்து கொண்டதைத் தாங்கள் அறிவீர்கள். மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் குறுக்கிட்டு, சமாதானப்படுத்தி, உறுப்பினர் விரும்பினால் மேற்படி திருக்கோயிலை அமைச்சரோடு சென்று பார்வையிடலாம் என்றார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள், இதுவரை அவருடைய விருப்பத்தைச் சொல்லவில்லை. ஆனால், அன்றையதினமே நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவை ஏற்று மேற்படி திருப்பணி நடைபெறக்கூடிய திருக்கோயிலை நானும் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. இ.ஏ.பி. சிவாஜி அவர்களும், இந்து சமய அறநிலையத் துறையினுடைய ஆணையர் அவர்களும் அங்கே சென்று பார்வையிட்டோம். நான் அளித்த பதிலில் 75 சதவீதப் பணிகள் அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்று முடிந்திருக்கின்றன என்றும், எஞ்சிய பணிகள் வெகு விரைவிலே தொடர்ந்து தொய்வில்லாமல் முடிக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படும் என்றும் சொன்ன உண்மை நிலையை அங்கே சென்றபோது நாங்கள் உணர முடிந்தது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், “நான் தினந்தோறும் அந்தத் திருக்கோயிலுக்குச் சென்று வருவேன்” என்றும், “இன்றைக்குக்கூட நான் இந்த சபை விவாதத்தில் கலந்து கொள்ள வருகின்ற நேரத்தில் அந்தக் கோயிலுக்குச் சென்று வந்தேன்” என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் நிலைமை அப்படியல்ல. அங்கே ஏறத்தாழ பல்வேறு பணிகள் 25 இலட்சம் ரூபாய்க்குமேல் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, பிரசன்ன வெங்கடேச பெருமாள் சன்னதி விமானமும் மற்றும் முன்மண்டபப் பணியும் நடக்கிறது; பத்மாவதி தாயார் சன்னதிப் பணி நடக்கிறது; ஆண்டாள் சன்னதியில் பணி நடக்கிறது; கோதண்டராமசாமி சன்னதியில் பணி நடக்கிறது; கருடாழ்வார் சன்னதியிலே பணி நடக்கிறது; திருக்கல்யாண

2010 ஏப்ரல் 7] [திரு. கே.ஆர். பெரியகருப்பன்]

மண்டபப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; மடப்பள்ளி மற்றும் அலுவலக அறைப் பணி முடிக்கப்பட்டிருக்கிறது; முகப்பு மண்டபப் பணி நடைபெற்று வருகிறது; மதில் சுவர் 60 சென்ட் அளவிலே முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது; அன்னதானக் கூடப் பணிகள் நடைபெற்று வருகின்றன; விநாயகர் மற்றும் கைலாசநாதர் சன்னதிப் பணி போன்ற 11 வகையான பணிகள் அந்தத் திருக்கோயிலில் முடிவுற்றும், நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்ற நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை மறுத்தது என்பது, உண்மையை மறைத்து பொய்யான செய்தியை இந்தச் சபையிலே அவர் தந்ததாகும். இந்த முழுமையானத் திருப்பணியை அந்த ஊராட்சி மன்றத்தினுடைய தலைவராக இருக்கக்கூடிய திரு. ரோஸ் பிள்ளை என்பவர்தான் செய்து வருகிறார். அரசு நிதியிலிருந்தோ, திருக்கோயில் நிதியிலிருந்தோ செய்யப்படவில்லை. அவர் பரம்பரை அறங்காவலர் என்ற முறையில் முழுத் தொகையையும் செலுத்தி அவரே பணி செய்து வருகிறார். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை மறுத்ததற்கு உள்நோக்கம் உள்ளது என்பதை நான் யூகிக்க முடிந்தது. காரணம் இதே திருக்கோயிலில் கடந்த 2005 ஆம் ஆண்டு அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில், அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற நேரத்தில் திருப்பணிக் குழு ஒன்றை அமைத்து, 15 உறுப்பினர்களைக் கொண்ட அந்தக் குழுவில் அவர் உறுப்பினராக மட்டுமல்ல தலைவராகவும் இருந்து பொறுப்பேற்று இருக்கிறார். இரண்டு ஆண்டுகாலம் அந்தத் திருப்பணிக் குழுவில் எந்தவிதமான பணியையும் செய்யாமல் ஒரு செங்கல்லைக்கூட எடுத்து வைக்காமல் இப்போது 75 சதவீதப் பணிகள் முடிவுற்ற அந்தத் திருக்கோயிலில் பணியே துவங்கப்படவில்லை என்று உண்மைக்கு மாறான தகவலைத் தந்து இந்தச் சபையை திசை திருப்புகின்ற வகையிலே அவர் நடந்திருக்கிறார். முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பது எந்த வகையிலே நியாயம் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடத்திலே இதைச் செய்தியாகச் சொன்னது மட்டுமல்ல, சென்று வந்தவுடனே, நேற்றையதினமே அங்கே எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் உங்களிடத்தில் ஆதாரமாகத் தந்திருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்டச் சூழ்நிலையில் நீங்கள் உண்மை நிலையை உணர்ந்து இந்தச் செயலுக்குக் காரணமான, என்னுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய, தமிழக அரசினுடைய செயலுக்குக் களங்கம் கற்பிக்கக்கூடிய அளவிற்கு நடந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேளுங்கள். Rule No. 109—ஐ படித்துப் பாருங்கள். அதிலே எந்த debate—ம் இருக்கக்கூடாது; எந்த விவாதமும் கூடாது என்று இருக்கிறது. ‘பேரவைத் தலைவர் அனுமதியின்பேரில் உறுப்பினர் ஒருவர் தன்னிலை விளக்கம் ஒன்றினை பேரவைமுன் பிரச்சினை எதுவும் இல்லையென்றாலும் அளிக்கலாம். ஆனால் அப்போது சர்ச்சைக்குரிய பொருள் எதையும் கொண்டு வரக்கூடாது. எந்தவித விவாதமும் இருக்கக்கூடாது.’ என்பது விதி (குறுக்கீடுகள்) No debate. (குறுக்கீடுகள்) மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்களிடமிருந்தும், அவர் சார்ந்திருக்கக்கூடிய இயக்கத்தினரிடமிருந்தும் அறிய விரும்புவது, அவர் அந்தத் திருக்கோயிலில் இரண்டு ஆண்டுக் காலம் திருப்பணிக் குழுவினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தாரா, இல்லையா? (குறுக்கீடுகள்) அதற்கான ஆதாரமும் என்னிடத்திலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதைப்போல திருப்பணிகள் நடைபெறுகின்றன என்று நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) **சத்தம் போடாதீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திருப்பணிகள் நடைபெறுகின்றன என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் நடைபெறவேயில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதற்கும் ஆதாரம் என்னிடத்திலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) இந்த சலசலப்புகளுக்கெல்லாம் அஞ்சுபவன் அல்ல நான். (குறுக்கீடுகள்) எதை மறுக்கிறார்களோ அதற்கு விளக்கம் சொல்ல உறுப்பினருக்கு வாய்ப்பைத் தாருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2010 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் சொன்ன ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *அதை நீக்கிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அவருக்கு வாய்ப்பைக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) அவர் சொல்லட்டும்.*

3. உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் 5–4–2010 அன்று தெரிவித்த ஆதாரமற்ற குற்றச்சாட்டு குறித்து தீர்ப்பினை வழங்க பேரவைத் தலைவருக்கு வேண்டுகோள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதல்வர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோயிலில் திருப்பணியே நடைபெறவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றஞ்சாட்டி அந்தக் குற்றத்தை மறுத்து நம்முடைய அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) இந்த அவையிலே விளக்கம் அளித்து, தன்னோடு நேரில் வந்தால் திருப்பணி நடைபெறுவதைக் காட்டத் தயார் என்று குறிப்பிட்டும்கூட, அதை ஏற்றுக்கொள்ளாமல், தவறுகளை ஏற்றுக்கொள்கின்ற மனப்பான்மை பெறாமலோ என்னவோ, ஒரு பெரிய ரகளை அன்றைக்கு இங்கே நடத்தப்பட்டது. அதன் பின் அமைச்சர் அவர்கள் நேரிலேயே அந்த இடத்திற்குச் சென்று அங்கே கோயில் திருப்பணி நடைபெறுவதைப் புகைப்படம் எடுத்து அதைக்கொண்டு வந்து தங்களிடத்திலே காட்டியிருக்கிறார். இந்த அவைக்கும் அதைக் காட்டி தான் சொன்னது சரிதான், மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் இந்த அவையிலே சொன்னதுதான் தவறான செய்தி என்று குறிப்பிட்டிருக்கிறார்.*

இதிலே ஆராய வேண்டியது, அ.தி.மு.க. உறுப்பினர் அவர்கள் தெரியாமல் இந்தச் செய்தியைச் சொன்னாரா அல்லது வேண்டுமென்றே இதைச் சொன்னாரா என்பதுதான். தெரியாமல்தான் சொன்னேன் என்று குறிப்பிடுவாரேயானால் இந்தப் பிரச்சினையை அமைச்சருடைய விளக்கத்தோடு

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*